11TH STD

## முன் மாதிரி இரண்டாம் இடைப் பருவத் தேர்வு --- 2

### கணக்குப்பதிவியல்

நேரம் : 1.15 மணி மதிப்பெண் : 45

### பகுதி ---- I

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 10 × 1 = 10

1. ஒரு நிறுவனம் ₹. 10,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவுகைச் செலவாக ₹. 1,000 செலவழித்தது அதன் பயனளிப்புக் காலம் 10 ஆண்டுகள். இறுதி மதிப்பு ₹. 1,000 நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை காண, சொத்தின் அடக்க விலை யாது?
   அ) ₹. 9,000 ஆ) ₹. 10,000 இ) ₹. 11,000 ஈ) ₹. 1,000
2. இருப்பாய்வின் வேறுபாடு எடுத்துச் செல்லப்படுவது
   அ) முதல் கணக்கிற்கு ஆ) வியாபாரக் கணக்கிற்கு
   இ) அனாமத்துக் கணக்கிற்கு ஈ) இலாபநட்டக் கணக்கிற்கு
3. சொத்தின் இறுதி மதிப்பு என்பது, பயனளிப்புக் காலத்தின் -------- அச்சொத்திலிருந்து கிடைக்கும் தொகையாகும்.
   அ) ஆரம்பத்தில் ஆ) இறுதியில் இ) மத்தியில் ஈ) இவைகளில் ஏதுமில்லை
4. நடைமுறை முதலை அதிகரிப்பதற்காக இந்திய தொழில் வளர்ச்சி வங்கியிடம் பெற்ற நடுத்தர காலக் கடன் தொகை ------------------
   அ) முதலினச் செலவுகள் ஆ) வருவாயினச் செலவுகள்
   இ) வருவாயின வரவுகள் ஈ) முதலின வரவுகள்
5. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
   அ) ஓர் நடப்புச் சொத்து ஆ) ஓர் நீர்மைச் சொத்து
   இ) புலனாகும் சொத்து ஈ) புலனாகாச் சொத்து
6. வணிகத்தின் நிகர இலாபம் --------------- அதிகரிக்கும்.
   அ) முதலினை ஆ) பெறுதல்களை இ) பொறுப்புகளை ஈ) எடுப்புகளை
7. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
   அ) காலப்போக்கு ஆ) பயன்பாடு
   இ) வழக்கொழிவு ஈ) மேற்கண்ட அனைத்தும்
8. வேறுபட்ட ஒன்று எது?
   அ) ரொக்கம் ஆ) சரக்கிருப்பு
   இ) அறைகலன் ஈ) முன்கூட்டிச் செலுத்திய செலவு
9. வருவாயினச் செலவின் பலன் கிடைப்பது ---------
   அ) கடந்த காலத்திற்கு ஆ) நடப்பு காலத்திற்கு
   இ) எதிர் காலத்திற்கு ஈ) எந்த காலத்திற்கும்
10. வங்கி மேல்வரைப்பற்று எதில் காண்பிக்கப்படும்?
    அ) வியாபாரக்கணக்கில் ஆ) இலாப நட்டக்கணக்கில்
    இ) கடன் பக்கத்தில் ஈ) சொத்து பக்கத்தில்



### பகுதி --- II

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 2 = 8

11. முதலினச் செலவு என்றால் என்ன?
12. ஈடுசெய் பிழைகள் என்றால் என்ன?
13. ஏதேனும் இரண்டு நேரடிச் செலவுகள் மற்றும் மறைமுகச் செலவுகளை குறிப்பிடுக.
14. தேய்மானம் கணக்கிடும் முறைகள் யாவை?
15. மொத்த இலாபத்தினை காண்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 15,000 | கொள்முதல் | 1,200 |
| விற்பனை திருப்பம் | 500 | கொள்முதல் திருப்பம் | 200 |
| விற்பனை | 19,000 | இறுதி சரக்கிருப்பு | 1,500 |

16. பின்வரும் பிழைகள் இருப்பாய்வு தயாரித்தபின் கண்டறியப்பட்டன. அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதி பிழைகளைத் திருத்தம் செய்யவும்.
    (அ) அருணுக்கு ₹. 152 - க்கு கடனுக்கு சரக்கு விற்றது, அருணின் கணக்கில் ₹. 125 என எடுத்தெழுதப் பட்டுள்ளது.
    (ஆ) லட்சுமியிடம் கடனுக்கு ₹. 550 க்கு சரக்கு கொள்முதல் செய்தது, அவரது கணக்கில் ₹.505 என வரவு வைக்கப்பட்டுள்ளது.
17. ஒரு நிறுமம் ₹. 1,80,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. நிறுவுகைச் செலவாக ₹.10,000 செலவழித்தது. எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள் மற்றும் இறுதி மதிப்பு ₹. 15,000. ஆண்டுதோறும் நீக்கப்படவேண்டிய தேய்மானத் தொகையை நேர்க்கோட்டு முறையில் கணக்கிடவும்.

### பகுதி --- III

**எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 4 × 3 = 12

18. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை? ( எதேனும் 3 )
19. அனாமத்துக் கணக்குப்பற்றிக் குறிப்பு எழுதவும்.
20. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும். ( எதேனும் 3 )
21. இருப்பாய்விற்கும் இருப்புநிலைக்குறிப்பிற்கும் இடையே உள்ள ஏதேனும் மூன்று வேற்றுமைகளை எழுதுக.
22. பின்வரும் விவரங்களிலிருந்து நிகர இலாபம் அல்லது நிகர நட்டத்தினை காண்க

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| வாடகை பெற்றது | 6,000 | கொள்முதல் செலவு | 15,300 |
| வாடகை செலுத்தியது | 3,500 | மொத்த இலாபம் | 40,000 |
| அளித்த கழிவு | 1,200 | வாரா கடன் | 5,000 |
| அச்சு மற்றும் எழுதுபொருள் | 3,000 | தேய்மானம் | 3,000 |

23. கீழ்கண்ட தகவல்களைக் கொண்டு, நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகை மற்றும் தேய்மான விகிதம் காண்க.

இயந்திரம் வாங்கிய விலை ₹. 2,00,000 ; மூலதனமாக்கப்படவேண்டிய செலவுகள் ₹. 50,000

எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 வருடங்கள்

24. கமல் & கோ, 2018 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் செலவுகள் செய்தது. அவற்றை முதலின, வருவாயின செலவுகளாகப் பிரிக்க.

1) கட்டத்தை வெள்ளை அடிப்பதற்கு செலவிட்டது ₹. 75,000
2) பொறிவகையை பழுது பார்த்தது ₹. 20,500
3) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹. 12,200

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 3 × 5 = 15

25. பின்வரும் செலவினங்கள் முதலினம், வருவாயினம் மற்றும் நீள்பயன் வருவாயினச் செலவுகளா எனக் கூறுக.

i) புதிய இயந்திரம் வாங்கியதற்கான ஏற்றிச்செல் கட்டணம், மற்றும் நிறுவுகைச் செலவுகள் ₹. 1,000
ii) இயந்திரம் இயக்குபவருக்கான கூலி செலுத்தியது ₹. 5,000
iii) புதிய தொழிற்சாலையை வண்ணம் பூசுவதற்கானச் செலவு ₹. 10,000
iv) பெறுதற்குரிய கடனாளிகளிடமிருந்து அந்த வருடத்தில் பெற்ற தொகை. ₹. 2,000
v) பொறி மற்றும் இயந்திரம் மீதான பேரளவு பழுதுபார்ப்புச் செலவுகள் ₹. 40,000

( அல்லது )

இருப்பாய்வு தயாரிக்கப்பட்ட பின் கண்டறியப்பட்ட பின்வரும் பிழைகளைத் திருத்துவதற்கான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தரவும். அனாமத்துக் கணக்கு இருப்பதாகக் கருதவும்.

1) விற்பனை ஏட்டின் மொத்தம் ₹. 2,000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது.
2) இயந்திரம் ₹. 3,000 - க்கு கொள்முதல் செய்தது கொள்முதல் ஏட்டில் பதியப்பட்டுள்ளது.
3) மதிக்கு ₹. 45- க்கு சரக்கு விற்றது அவரது கணக்கில் ₹. 54 என எடுத்து எழுதப்பட்டுள்ளது.
4) கொள்முதல் திருப்ப ஏட்டின் மொத்தம் ₹. 200 அதிகமாகக் கூட்டப்பட்டுள்ளது.
5) விற்பனை ஏட்டின் கூட்டுத்தொகை ₹. 1,122, பேரேட்டில் ₹. 1,222 என எடுத்தெழுதப்பட்டுள்ளது.

26. கீழ்காணும் விவரங்களிலிருந்து இலாப நட்ட கணக்கினைத் தயார் செய்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| மொத்த இலாபம் | 50,000 | பெற்ற வட்டி | 2,000 |
| அலுவலக வாடகை | 10,000 | பெற்ற தள்ளுபடி | 3,000 |
| நிலைச் சொத்துகள் மீதான தேய்மானம் | 8,000 | வெளித்தூக்கு கூலி | 2,500 |
| தள்ளுபடி அளித்தது | 12,000 | காப்பீடு | 3,500 |
| விளம்பரம் | 4,000 | பொதுச் செலவுகள் | 3,000 |
| வாடகை மற்றும் வரி | 1,000 | எரிபொருள் மற்றும் வாயு | 1,200 |



( அல்லது )

ஒரு தயாரிப்பு நிறுமம், ஏப்ரல் 1, 2010 அன்று பொறி வகை மற்றும் இயந்திரம் ₹. 4,50,000 - க்கு வாங்கி, நிறுவுதல் செலவாக ₹. 50,000 செலவழித்தது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்திய பிறகு, அச்சொத்தானது ₹. 3,85,000 க்கு விற்கப்பட்டது. தேய்மானம் ஆண்டுதோறும் 15% நிலைத் தவணைமுறையில் நீக்கப்படவேண்டும். ஒவ்வொரு ஆண்டும் கணக்குகள் மார்ச் 31- ல் முடிக்கப்படுகின்றன. விற்ற இயந்திரத்தின் மீதான இலாபம் அல்லது நட்டத்தைக் கணக்கிடவும்.

27. பின்வரும் விவரங்களிலிருந்து 2010 டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய மொத்த இலாபம் மற்றும் நிகர இலாபம் கணக்கிடவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| கூலி | 2,600 | விற்பனை | 72,250 |
| கொள்முதல் | 32,250 | இதரச் செலவுகள் | 200 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 7,600 | விளம்பரம் | 500 |
| கொள்முதல் திருப்பம் | 250 | பங்காதாயம் பெற்றது | 2,500 |
| அலுவலக அச்சு எழுதுபொருட்கள் | 250 | பழைய அறைகலன் விற்றதில் நட்டம் | 300 |
| வாடகை | 300 | பொதுச் செலவுகள் | 2,500 |
| விற்பனைத் திருப்பம் | 1,250 | முதலீடுகள் விற்றதில் ஏற்பட்ட இலாபம் | 500 |
| சம்பளம் | 3,000 | செலுத்திய கழிவு | 150 |
| விற்பனை தொடர்பானச் பயணச் செலவுகள் | 1,800 | அலுவலகச் செலவுகள் | 1,600 |

( அல்லது )

கீழ்காணும் பதிவுகளைத் திருத்தம் செய்யவும்.

| | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ | மதன் க/கு ப<br>ரொக்க க/ கு<br>( மதனுக்கு சம்பளம் வழங்கியது ) | | 25,000 | 25,000 |
| ஆ | கொள்முதல் க / கு ப<br>ரொக்க க / கு<br>( அறைகலன் வாங்கியது ) | | 5,000 | 5,000 |
| இ | அன்பு க/கு ப<br>ரொக்க க / கு<br>( வாடகை செலுத்தியது ) | | 7,500 | 7,500 |
| ஈ | ரொக்க க / கு ப<br>பாபு க / கு<br>( ரொக்க விற்பனை ) | | 12,000 | 12,000 |
| உ | விற்பனை க / கு ப<br>ரொக்க க / கு<br>( கமலுக்கு கடன் விற்பனை செய்தது ) | | 1,500 | 1,500 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613